



# சிறப்பு மாணவர் மற்றும் மாணவியர் விடுதி!

## மாநிலக் கல்லூரியில் மகத்தான முயற்சி

**திராவிட மாடல் அரசு**

98

**பன்னீர் பெருமாள்**

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....

சென்னை மாநிலக் கல்லூரி, தமிழ்நாட்டுக்கே முன்னோடிக் கல்லூரி. கல்வித் துறையிலும் பல புதிய முயற்சிகளைச் செயல்படுத்திய கல்லூரி. புதிய பட்டப்படிப்புகள் முதல், சிறப்பு மாணவர்களுக்கான உயர்கல்வி வரை செயல்படுத்திப் பார்க்கப்பட்ட கல்லூரி.

முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, சிறப்புத் திறனாளிகளுக்கான இளநிலைக் கணினிப் பாடத்தை, இங்குதான் அறிமுகம் செய்து வைத்தார். அந்த வகையில், நம் திராவிட மாடல் அரசு சிறப்புத் திறனாளிகள், யாருடைய உதவியும் இல்லாமல், கணினி பயன்படுத்த தனி ஆய்வகம் உருவாக்கி கொடுக்கப்பட்டது. அதன் அடுத்த கட்டமாக இன்று இந்தியாவிற்கே முன்னோடித் திட்டமாக, சிறப்பு மாணவ- மாணவிகளின் தேவைகளை அறிந்து உலகத்தரமான விடுதியை 'திராவிட மாடல் அரசு' உருவாக்கி உள்ளது.

### செவிசாய்த்த அரசு

சென்னை மாநிலக் கல்லூரியில் 380-க்கும் மேற்பட்ட சிறப்பு மாணவ, மாணவிகள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இங்கே வந்து, தங்கிப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்குத் தேவையான வசதிகளுடன் கூடிய விடுதிகள் இல்லாமல் இருந்தது. அவர்கள், பொது மாணவர் விடுதிகளைத்தான் பயன்படுத்தி வந்தனர். வெளியில் இருந்து மாற்றுத்திறனாளி மாணவர்கள் வந்துசெல்வது மேலும் சிரமமானது.

இந்த நிலையில், 2022-ஆம் ஆண்டு ஜூலை மாதம் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவின்போது, துணை முதலமைச்சரிடம் சிறப்பு மாணவர்களுக்கான விடுதி தேவை குறித்து, மாணவர்கள் கோரிக்கை வைத்தனர். அவர், முதலமைச்சர் கவனத்துக்குக் கொண்டு சென்றதும், பட்டமளிப்பு விழா மேடையிலேயே 'சிறப்பு மாணவ, மாணவிகளுக்கான சிறப்பு வசதிகளுடன் கூடிய விடுதி, மாநிலக் கல்லூரி வளாகத்திலேயே அமைத்துத் தரப்படும்' என்று முதலமைச்சர் அறிவித்தார்.

உடனடியாக உயர்கல்வித்துறை சார்பில், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கல்லூரி வளாகத்திலேயே 21 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில், விடுதிக் கட்டடங்கள் கட்டப்பட்டன. ஒன்றரை ஆண்டுகளில் உயர்ந்து நிற்கும் இந்த விடுதியை, 04.12.2024 அன்று முதலமைச்சர் திறந்துவைத்தார்.



இந்த விடுதியை எங்கள் தேவை அறிந்து, உணர்வுப் பூர்வமாக உருவாக்கி இருக்கிறார்கள். நாங்கள் புதிதாக ஒரு இடத்திற்குச் சென்றால், அந்த இடத்தைப் பழகுவதற்கு இரண்டு மூன்று நாட்கள் ஆகும். அதுவரை யாராவது ஒருவரது உதவி தேவைப் படும். ஆனால், இந்த விடுதியை ஒரே நாளில் பழகிக்கொண்டோம். யார் உதவியும் இல்லாமல் அறையில் இருந்து கழிப்பறை, உணவுக்கூடம், காப்பாளர் அறை என்று சென்று வர முடிகிறது.

இதற்கு முன் வெளி இடங்களில் தங்கியபோது, பல சிக்கல்களைச் சந்தித்தோம். காலை நேரத்தில் கல்லூரிக்குச் சரியாக வர முடியாது. இனி, நாங்கள் காலையிலேயே கல்லூரிக்குச் செல்வோம்.

**–ஆர்த்தி, முதுகலைத் தமிழ் மாணவி**



என்னைப் போன்ற மாற்றுத் திறனாளிகள் தடையில்லாமல், நடந்து செல்ல தொட்டுணரும் வகையிலான (Tactile) மேப் அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து இடங்களிலும் பிரெய்லி குறியீடுகள் வைக்கப் பட்டுள்ளன.

சக்கர நாற்காலிகளைப் பயன் படுத்தும் மாணவர்கள் பயன்படுத்துவதற்கு ஏற்ப, சாய்வுதள நடைபாதை அமைக்கப் பட்டுள்ளது. மாணவர்களுக்கான அறைகள் நல்ல இடவசதியுடன், காற்றோட்டமாகவும் உள்ளன. எழுத்தாளர்களுக்கு அரசு அளிக்கும் 'கனவு இல்லம்' போல இந்த விடுதி எங்களுக்குக் 'கனவு விடுதி'யாகக் கிடைத்திருக்கிறது.

**–செயகுமார், முதுகலைத் தமிழ் மாணவர்**

### விடுதியின் சிறப்புகள்

முதலமைச்சர் அறிவித்தது போல, இந்த விடுதி பல்வேறு சிறப்புத் தன்மையுடன் கட்டப்பட்டுள்ளது. தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 64 ஆயிரத்து 455 சதுர அடி பரப்பளவில், 38 மாணவர் அறைகள் மற்றும் 32 மாணவியர் அறைகளுடன், 114 மாணவர்களும், 96 மாணவிகளும் தங்கும் வசதியுடன் கட்டப்பட்டுள்ளது.

இங்கு பார்வை மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு, வசதியாக விடுதி முகப்பிலேயே மாணவர்கள் தொட்டு உணர்தல் வாயிலாக விடுதியில் எங்கு வேண்டுமானாலும் செல்லும் வகையில், மொத்த விடுதியின் வரைபடமும் பிரெய்லி வடிவத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், அனைத்துத் தளங்கள் மற்றும் அறைகளில் உள்ள எண்கள் உட்பட அனைத்துத் தகவல்களும் பார்வை மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு வசதியாக, பிரெய்லி வடிவத்தில் உருவாக்கபட்டுள்ளன. அதேபோல் தொட்டுணரக்கூடிய வழிகாட்டும்




மேற்பரப்புக் குறிகாட்டிகளுடன் (Tactile Guiding Surface Indicators) கூடிய தரை அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் யார் உதவியும் இல்லாமல், விடுதி அறைகளுக்குச் சென்றுவர விடுதி முழுவதும் சுவற்றில் கம்பிகள் அமைக்கப் பட்டுள்ளன. பேசுவதற்கும் கேட்பதற்கும் சிரமம் இருக்கும் மாணவர்களுக்கு, இரவில் ஏதேனும் அவசரத் தேவை ஏற்படுமாயின், அவர்கள் உடனடியாக உதவிக்கு அழைக்க, படுக்கைக்கு அருகிலேயே அனைத்து அறையிலும் அவசர அழைப்புமணி இணைக்கப் பட்டுள்ளது.

### திராவிட மாடலின் மகுடம்

ஒவ்வொரு அறையிலும் சிறப்பு மாணவர்கள் பயன்படுத்தும் வகையில், சிறப்பு வகை அலமாரிகள், அனைத்து அறைகளிலும் 'ஸ்மார்ட் லாக்', 'பிரத்யேக சாய்தள அமைப்பு', கழிவறைகளில் அவசரக் குறியீடு விளக்குகள், குளியலறை மற்றும் கழிவறைகளில் சிறப்பு வைகிராப் பார்கள் (Special Type Grab Bars), நான்கு மின்தூக்கிகளிலும் ஒலி மற்றும் ஒளி அமைப்பான்கள் போன்ற பல சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கட்டடம் அதிக குளிர் மற்றும் வெப்பத்தை ஏற்படுத்தாத வண்ணம் நவீன அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு அறைக்கு மூன்று படுக்கை வசதியுடன், பெரிய அறைகளாக காற்றோட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியும் அமைத்துத் தரப்பட்டுள்ளது. மாணவர்களின் பொழுதுபோக்கிற்காக பூங்கா போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

'எல்லோருக்கும் எல்லாம்' என்பது சொற்களல்ல; செயல்' என்பதை எல்லாத் துறைகளிலும் செயல்படுத்தி வருகிறார், நம் முதலமைச்சர். அதில் மாற்றுத்திறனாளி மாணவர்களின் விடுதி மகுடமாக அமைந்திருக்கிறது.

**...சாதனை தொடரும்**

### ஊழல் கறையை நீக்கும் அதிநவீன மெஷின்!

தேசியவாத காங்கிரஸ் தலைவர் அஜித் பவார் மற்றும் அவரது குடும்பத்தினருக்குத் தொடர்புடைய பல இடங்களில் 2021-ஆம் ஆண்டு வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர். அவர் பினாமி சொத்துக்களை வைத்திருந்ததாகச் சொல்லி, மகாராஷ்டிராவின் சதாரா என்ற பகுதியில் உள்ள அவரது சர்க்கரை ஆலை, டெல்லியில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு, கோவாவில் உள்ள ரிசார்ட் உள்ளிட்ட பல சொத்துக்கள் முடக்கப்பட்டன.

அதன்பிறகுதான், தேசியவாத காங்கிரஸ் கட்சி இரண்டாக உடைக்கப்பட்டு, அஜித் பவார் தலைமையில் ஒரு அணி உருவானது. சிவசேனாவை உடைத்து, ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான அணியும் உருவாகி, மகாராஷ்டிராவில் சிவசேனா–காங்கிரஸ் – தேசியவாத காங்கிரஸ் கூட்டணி அரசு கவிழ்க்கப்பட்டது. அஜித் பவார் அணியும், ஏக்நாத் ஷிண்டே அணியும் பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்தன. ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான அமைச்சரவையில், துணை முதல்வரும் ஆனார். அதன்பிறகு, அஜித் பவார் தொடர்புடைய இடங்களில் எங்கும் சோதனை நடத்தப்படவில்லை. வழக்கிலும் நெருக்கடி இல்லை.

இப்போது, மகாராஷ்டிராவில் மீண்டும் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. தேவேந்திர பட்னாவிஸ் தலைமையிலான அமைச்சரவையில், ஏக்நாத் ஷிண்டேவும் அஜித் பவாரும் துணை முதல்வர்கள் ஆகிவிட்டனர். இந்நிலையில், அஜித் பவார் குடும்பத்தாரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள், பினாமி சொத்துக்கள் என்பதற்கான ஆதாரங்கள் இல்லை என்று கூறி, பினாமி பரிவர்த்தனைத் தடுப்புத் தீர்ப்பாயம் சமீபத்தில் வழக்கை முடித்து வைத்துவிட்டது. இதையடுத்து, அஜித் பவார் துணை முதல்வரான மறுநாளே அவரது சொத்துக்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.

ஊழல் கறையைப் போக்கிக்கொள்ள 'உலகின் நம்பர் ஒன் இயந்திரம்' பா.ஜ.க.வின் வாஷிங் மெஷின்தான் என்ற எதிர்க்கட்சிகள் விமர்சனம் உண்மையாகிவிட்டது.

### ஃப்ளாஷ்பேக்



**தலைவரின் எழுச்சி உரை!**



சி.வீரகணேசன்

1993-ஆம் ஆண்டு கழகத்தின் சோதனையான காலத்தில், கழகக் கட்டுக்கோப்பை உலகுக்கு உணர்த்த, மதுரையில் மாநாடு கூட்டப்பட்டது. கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வருகை தந்து எங்களிடையே எழுச்சியுரை ஆற்றினார். தொண்டர்கள் அனைவரும் அவரது உரையைக் கேட்டு பழைய உற்சாகத்தை அடைந்தோம். அப்போது நான் சால்வை அணிவித்து, தலைவரின் பாராட்டுதலைப் பெற்றது, என்னால் மறக்கமுடியாத நிகழ்வு. அருகில், நினைவில் வாழும் மாநகர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் அண்ணன் சொ. காவேரி மணியம் இருக்கிறார்.

**– சி.வீரகணேசன், மாநிலத் துணைச் செயலாளர், கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


**'திராவிட பார்லிமெண்ட்ரி கட்சி'!**

சுதந்திரத்திற்குப் பிறகு 1952-ஆம் ஆண்டு சட்டசபைக்கும், நாடாளுமன்றத்திற்கும் முதல் தேர்தல் நடைபெற்றது. அப்போது தி.மு.க. போட்டியிடவில்லை என்றாலும், கழகம் ஆதரித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 8 பேர், சட்டமன்ற உறுப்பினர்கள் 43 பேர் வெற்றிபெற்றனர். அவர்களில் சிலர் சேர்ந்து சட்டமன்றத்தில் 'திராவிட பார்லிமெண்ட்ரி கட்சி' என இயங்கினர். அதற்கு அண்ணா ஒப்புதல் அளித்ததுடன், வெற்றி பெற்றவர்களுக்கு சென்னை செயின்ட் மேரீஸ் ஹாலில் தேநீர் விருந்தும் அளித்தார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

684

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24-26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131